வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
FWC
தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016
**Term Examination, November - 2016**

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | நாடகமும் அரங்கியலும் – I |
|---|---|---|

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *01)* | **5** | *11)* | **3** | *21)* | **1** | *31)* | **4** |
| *02)* | **2** | *12)* | **2** | *22)* | **3** | *32)* | **1** |
| *03)* | **3** | *13)* | **4** | *23)* | **4** | *33)* | **3** |
| *04)* | **3** | *14)* | **3** | *24)* | **5** | *34)* | **2** |
| *05)* | **2** | *15)* | **5** | *25)* | **2** | *35)* | **2** |
| *06)* | **3** | *16)* | **5** | *26)* | **1** | *36)* | **3** |
| *07)* | **4** | *17)* | **4** | *27)* | **3** | *37)* | **3** |
| *08)* | **3** | *18)* | **3** | *28)* | **4** | *38)* | **5** |
| *09)* | **2** | *19)* | **4** | *29)* | **2** | *39)* | **2** |
| *10)* | **5** | *20)* | **2** | *30)* | **3** | *40)* | **1** |

## பகுதி II

### பிரிவு - A

**1.**

i) ஒரு கலைவடிவமாகும், வாழ்வின் ஒரு துண்டம், போலச் செய்தலை அடிப்படையாகக் கொண்டது, கட்புல, செவிப்புல கலை வடிவமாகும். மோதுகையை அடிப்படையாகக் கொண்டது. (என்பவற்றைக் கூறி விளக்குதல்)

ii) அரங்கு சமூகத்தின் கண்ணாடியாகும். சமூகத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் எடுத்துக்காட்டும், காலத்துக்குக் காலம் சமூகப் பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களில் காட்டக்கூடியது.

iii) பின்வரும் வளர்ச்சிப்படிகளைக் கூறி விளக்குக.

- மதகுரு தெய்வமாக அபிநயத்தல்
- மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயத்தல்.
- ஐதீகக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.
- நாடக நிகழ்வு தனியாகப் பிரியத் தொடங்குதல்

**2.**

i) அரிஸ்ரோட்டில், மிகவும் தொன்மையானது, தொன்மையான அவலச்சுவை வடிவத்தைக் கூறுகிறது, அவல இலக்கணங்களைக் கூறுகிறது, மூன்றன் ஒருமை பற்றியும், கதாசிஸ் கமாசியா பற்றியும் கூறுகிறது..

ii) கதைப்பின்னல், சிந்தனை, சொல்லாடல், பாத்திரம், இசை, பாடல், காட்சி என்பவற்றைக் கூறி இவற்றுள் ஒன்றை விளக்குக. (6 உறுப்புக்கு 3 புள்ளி) (1 விளக்கம் 2 புள்ளி)

iii) காலம், இடம், செயல்

காலம் - நாடக கதை நிகழும் காலம்

இடம் - நாடகக் காட்சியைக் குறிக்கும்.

செயல் - கதை நிகழும் காலம், இடம் என்பவற்றுக்கு பொருத்தமான செயலாக அமையவேண்டும்.

இவற்றை அன்றிகனி நாடக பாடத்துடன் எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

**3.**

i) வட்டக்களரி : 7 அல்லது 8 தடிகள் நடப்பட்டு உச்சி வேய்ந்த கூரை உடையது நிலமட்டத்தில் இருந்து 3 அடி உயர்த்தப்பட்டது. ஆடல் முதன்மைபெறும் பார்வையாளர் சுற்றிவர அமர்ந்திருப்பர். பாத்திரம் திரை பிடிக்கப்பட்டு …… வருவார்.

ii) குளோப் அரங்கு : எலிசபெத் கால அரங்குகுளில் ஒன்று. ஷேக்ஸ்பியரின் நாடகம் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்டது. எண்கோண வடிவிலான கட்டமைப்பைக் கொண்டது. கண்டுபிடித்தல் வெளி உண்டு. 3 மாடிக் கட்டடம் கொண்டது. முன்துருத்திய மேடை உடையது.

iii) கிரேக்க அரங்கு : திறந்தவெளி முக்கிய இடம் வகிக்கிறது. மலைகளை படியாகச் செதுக்கிப் பார்ப்போர் இருக்கை அமைக்கப்படும். வட்டவடிவ ஒகஸ்ரா எனும் ஆடுகளம் காணப்படும். நடிப்பிடம், காட்சிக்கூடம் எனும் பகுதிகளைக் கொண்டது, பகல் நேரங்களில் ஆற்றுகை செய்யப்படும், அரங்கப் பொறிகள் பயன்படுத்தப்படும், உயர்ந்த பாத அணி வேடமுகம் என்பன பயன்படுத்தப்படும்.

## பிரிவு - B

**4.**

i) முறைமைக் கோட்பாடு : 1863 பிறந்தவர், ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர், ஸ்ரனிஸ்ல வஸ்கியால் முன்வைக்கப்பட்டது. யதார்த்த மோடியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. நடிப்பிற்காகப் 10 அம்சங்களைக் கொண்டது. அரங்கில் பாத்திரமாக வாழுதல்.

ii) உடற்பொறிமுறைக் கோட்பாடு : 1874 பிறந்தவர் ரஷ்ய நாட்டவர், மேயர் ஹோல்ட் மெஸ்கோ கலையரங்க மாணவன் அதிலிருந்து விடுபட்டு கீழைத்தேய கலைகளில் இருந்து உத்திகளை கையாண்டு பொறிமுறை நுட்பத்தை அறிமுகமாக்கினார்.

iii) காவிய அரங்கக் கோட்பாடு : 1898 பிறந்தவர் ஜேர்மன் நாட்டவர் பெக்தோட் பிறக்டினால் முன்வைக்கப்பட்டது. இதனை தூரப்படுத்தல், அன்னியமாதல் கோட்பாடு என்பர். பாத்திர படர்க்கைப் பயன்பாடு இடைவெட்டி வரும் இசை, உரையாடல் போன்ற விடயங்கள்.

**5.**

i)

| லேகதர்மி | நாட்டிய தர்மி |
|---|---|
| • இயல்பான நடத்தை | • இயல்பற்ற நடிப்பு |
| • போலித்தன்மை அற்றது | • கற்பனை அதிகம் |
| • லலித அரங்க அசை அற்றது. | • லலித அரங்க அசைவு கொண்டது. |
| • இயல்பான உரையாடல் அபிநயம் | • அசாதாரண நடத்தை |
| • யதார்த்தப் பண்பு கொண்டது. | • யதார்த்த விரோத பண்பு |

ii) இந்தி அரங்கில் பேசப்படும் மார்க்க, தேசிய வகைக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிட்டு விளக்குக.

| மார்க்க | நாட்டிய தர்மி |
|---|---|
| • நியம விதிகளிற்கு உட்பட்டது. | • நியம விதிகளிற்கு உட்படாதது. |
| • நெகிழ்ச்சித் தன்மை அற்றது, | • நெகிழ்ச்சித் தன்மையானது. |
| • உயர் பார்யைாளரைக் கொண்டது | • பாமர மக்களைப் பார்வையாளராகக் கொண்டது. |
| • தனக்கென நிரந்தரப் பார்யைாளரைக் கொண்டது. | • வடிவ துணுக்கம் குறைந்தது, |

iii) வாச்சீகம் - உரையாடல், பாடல்
ஆங்கீகம் - உடல் அசைவு
சாத்வீகம் - உணர்ச்சி சித்தரிப்பு
ஆஹார்யம் - வேட உடை, ஒப்பனை, போன்றவற்றைக் கூறி விளக்குதல்.

**6.**

i) வேட்டைத் திருவிழா

இந்துசமயம் சார்ந்தது, நாடகநிலைச் சடங்காகும். பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு முறைகளில் ஆற்றுகை செய்யப்படுவது. வேடுவர்கள் போல அபிநயப்பர், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்த்தப்படும். கதவடித்துப் பாடுதல் இடம்பெறம், பறை ஒலிக்கு ஏற்ப வேடுவர் ஆடுவர்.

ii) பாண்டவர் வனவாசம்

கிழக்கு மாகாணத்தில் கல்முனை அருகே பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தில் *18* நாட்கள் நிகழும். பாரத கதையை மீள்நிகழ்த்திக் காட்டும் சடங்காகும். பாண்டவர் வேடமிட்டு வாழ்மாற்றம், வாழைப் பெறுநர் என்பன இடம்பெறும். சிலாபம், பழுகாமம் போன்ற இடங்களில் அம்மன் ஆலயத்தில் இடம்பெறும்.

iii) உடக்குபாஸ்

கத்தோலிக்க மக்களின் தவக்கால வழிபாட்டுடன் தொடர்புபட்ட சடங்காகும். யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களில் நிகழ்த்தப்படுகின்றது. இயேசின் பாடு, மரணம், உயிர்ப்பு, என்பவற்றைச் சித்தரித்துக் காட்டும். பொம்மைகளைக் கொண்டு நடிக்கும் நடிக்கும் மரபு வேட உடை, ஒப்பனைக் காட்சிப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது.

iv) குளுர்த்திச் சடங்கு

கண்ணகையம்மன் சடங்குடன் தொடர்புடையது. மாரியம்மன் கோவில்களிலும் நடைபெறும். அம்மனைக் குளிர்வித்து நோய் தீர்த்தல், மழை வேண்டுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சொல்லாடல், போலச்செய்தல் அரங்கப் பொருள் பயன்பாடு எனும் நாடகப் பண்பு காணப்படும்.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, நவம்பர் - 2016**
**Term Examination, November - 2016**

FWC

| தரம் :- 13 (2017) | புள்ளித்திட்டம் | நாடகமும் அரங்கியலும் – II |
|---|---|---|

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| *01)* | **2** | *11)* | **3** | *21)* | **1** | *31)* | **2** |
| *02)* | **3** | *12)* | **5** | *22)* | **5** | *32)* | **1** |
| *03)* | **1** | *13)* | **4** | *23)* | **2** | *33)* | **4** |
| *04)* | **2** | *14)* | **1** | *24)* | **4** | *34)* | **2** |
| *05)* | **2** | *15)* | **2** | *25)* | **3** | *35)* | **4** |
| *06)* | **5** | *16)* | **3** | *26)* | **3** | *36)* | **1** |
| *07)* | **4** | *17)* | **4** | *27)* | **1** | *37)* | **3** |
| *08)* | **3** | *18)* | **4** | *28)* | **4** | *38)* | **2** |
| *09)* | **4** | *19)* | **4** | *29)* | **3** | *39)* | **5** |
| *10)* | **3** | *20)* | **2** | *30)* | **3** | *40)* | **4** |

## பகுதி II

### பிரிவு - A

**1.**

i) ஹெல்மன், நோறா, டொக்றாங், குரொக்ஸ்டட், கிறிஸ்ரீனா

ii) **நோறா**

சாதாரண குடும்பப் பெண், கடன் வாங்குதல், அழகுணர்வு கொண்டவள், கணவனுடன் மட்டும் வாழ விரும்புபவள், பிள்ளைகளைப் பராமரிப்பவள், மரபுவழி வந்தவள், உதவும் சுபாவம் கொண்டவள், உண்மையை இலகுவில் வெளியிடாதவள், தேவையின் பொருட்டுப் பொய்யுரைப்பவள்.

**ஹெல்மர்**

வாழ்க்கை மீது பிடிப்பற்றவர், பிழை செய்தவர்களை விரும்பாதவர், மனைவி பொய்யுரைக்கக் கூடாது என நினைப்பவர், தன் விருப்பத்திற்கு மட்டும் உடன்பட்டு வாழவேண்டும் என விரும்புபவர்.

**குரொக்ஸ்டட்**

கஸ்ரம் வரும் வேளை உதவும் சுபாவம், உண்மைகளை ஏற்பவர், தவறுகளை உணர்ந்து வருந்துபவர்.

**கிறிஸ்ரீனா**

நல்ல நண்பி, உண்மை கூறுபவள், இழந்த வாழ்வை மீண்டும் பெறுபவள்.

iii) வீட்டின் வரவேற்பறை இரண்டு வாயில் கொண்ட அறை, வீட்டுத்தளபாடம் ஆடும் கதிரை நல்ல கதிரை, நத்தார் மரம், உணவு மேசை, மாடிப்படி என்பன உள்ளடக்கி படம் வரைதல்.

**2.**

i) ஒத்தல்லோ : கறுப்பு நிறமுடையவன், மூர் இனத்தவன், சிறந்த போர்வீரன், தடித்த உதடு உடையவன், எல்லோருடனும் உண்மை, விசுவாசமாகப் பழகுபன், எவரையும் நம்புபவன், டெஸ்ரி மோனாவில் அதிக அன்புடையவன், நாட்டுப்பற்றுடையவன்

ii) டெஸ்ரிமோனா : அப்பாவியானவள், இரக்க சிந்தனையுடையவள், அழகானவள், கணவனை மதிப்பவள், மன்னிக்கும் மனப்பாங்கு கொண்டவள், தெய்வ சிந்தனையுடையவள், மற்றவர்களுக்காய் குரல் கொடுப்பவள்.

இயாகோ : உலகில் சிறந்த வில்லத்தன்மை கொண்ட பாத்திரம், நயவஞ்சகன், தனது சதி முயற்சிக்கு மற்றவரை இணைத்துக்கொள்பவன், எவரையும் நம்பாதவன், பதவியாசை பிடித்தவன். (போன்ற விடயங்களை எழுதலாம்)

iii) ஒத்தல்லோ இயாகோவின் சதி வலையில் வீழ்ந்து மனிதப் பலவீனமான சந்தேகத்தின் காரணமாகத் தன்னிலை இழந்து இழிநிலைக்குச் செல்லல்.

இதேபோன்று ஒத்தல்லோ டெஸ்ரிமோனா இடையிலான மோதுகை எடுத்துக்காட்டப்பட்டு விழக்கியிருப்பின் புள்ளிகள் வழங்கவும்.

**3.**

i) நாடக அரங்க கல்லூரி

- *1979இல் குழந்தை சண்முகலிங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டது.*
- *சுய ஆக்க நாடகங்களைத் தயாரித்தல்.*
- *அரங்கப் பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், நாடகப் பட்டறைகள் நடாத்தியமை.*
- *இன்றுமட்டு நாடகங்களை மேடையேற்றியமை.*
- *அரங்கம் எனும் சஞ:சிகை வெளியிட்டமை.*

ii) திருமறைக் கலாமன்றம்

- *1965 மரியசேவியரால் ஆரம்பிக்கப்பட்டது.*
- *திருப்பாடுகளின் காட்சி நாடகமே பிரதானமானது.*
- *பாரம்பரிய அரங்கான கூத்து, இசை நாடகங்கள், கிராமியக் கலைகளை ஆற்றுகை செய்தனர்.*
- *நாடகப் பயிலரங்கு, பயிற்சிப் பட்டறை காட்சிகள் நடத்தியமை*
- *ஆற்றுகை சஞ்சிகை வெளியிட்டமை.*
- *பல இலக்கிய முயற்சிகளையும் முன்னெடுத்தல்.*

iii) அவைக்காற்றுகைக் கலைக்கழகம்

- *1980களில் பாலேந்திரா நிர்மலா நித்தியானந்தன், மு. நித்தியானந்தன் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.*
- *A.J. கனகரெட்ணா தலைவராகத் தொழிற்பட்டார்.*
- *மொழிபெயர்ப்பு நாடகங்களை அதிகமாக மேடையேற்றினார்.*
- *யுகதர்மம், கண்ணாடி வார்ப்புகள், ஒருபாலைவீடு, தலைவர், இடைவெளி போன்ற நாடகம்*
- *தொடர்ந்து லண்டனில் இயங்கிவருகின்றனர்.*

## பிரிவு - B

**4.**

i) நடிகர்கள் ஆண்களாகக் காணப்படுவர், இரவு நேரங்களில் ஆற்றுகை இடம்பெறும், நீண்டநேரம் விடிய விடிய நடைபெறும், வட்டக்களரியில் இடம்பெறும் இதிகாச, புராணக் கதைகளைக் கொண்டது. அண்ணாவியார் பயிற்றுவிப்பார், பாரம்பரிய முறையில் வேட உடை காணப்படும். பாடல் மூலம் காட்சியமைப்பு காணப்படும். மத்தாளம், கைத்தாளம் பயன்படுத்தப்படும்.

ii) வடமோடி தென்மோடியினை ஒப்பிட்டு விளக்குக.

| வடமோடி | தென்மோடி |
|---|---|
| இதிகாச புராணங்களில் இருந்து கதை தெரிவு | தமிழில் நாட்டுக் கற்பனைக் கதைகள் பொருளாக அமையும். |
| ஆடல் வேகமானது | ஆடல் நுணுக்கமானது |
| பாதம் நிலத்தில் படும்படி ஆடல் | பாதத்தில் பிற்பகுதி நிலத்தில் படும்படி ஆடல் |
| ஆடல் இலகுவானது | ஆடல் கடினமானது |
| வீரச்சுவை முதன்மை | காதல் சுவை முதன்மை |
| விருத்தப்பா அதிகம் | தருயாப்பு அதிகம் |
| பாரம் கூடிய கறுப்பு உடுப்பு | பாரம் குறைந்த உடை (கதர் ஆடை) |
| பாரம் நிறைந்த முடி | பூ முடி |

iii) நிகழ்த்துவிப்போராகவும் நிகழ்த்துவோராகவும் காணப்படுவார். கட்டங்கொடுத்தல், தினக்கூத்து, சதங்கை கட்டுதல் என்பவற்றைப் பயிற்றுவிப்பார். கிழமைக்கூத்து, அடுக்குப்பார்த்தல், ஆற்றுகையை நிகழ்த்தல் போன்ற பணிகள் இடம்பெறும். நடிகருக்குப் பயிற்சியளித்தல்.

**5.** கோலம் :

- தனாயம்பல அரங்கு, வேடமுகம் அணிதல்
- 53 பாத்திரங்கள் தோன்றுதல்
- சரச்சந்திராவின் மூன்று வகையான பிரிப்பு
- வசந்தன் கூத்துபன் ஒப்பிடும் தன்மை

சொக்கரி

- குருநாண்ஸே பாத்திர அறிமுகம், களத்து மேடை - மேடை
- ஆண் நடிகர்கள்
- விவசாயச் சமுதாயங்களில் செழிப்பு, சௌபாக்கியம் என்பன எதிர்பார்த்தல்

நாடகம

- குருநாண்ஸே அண்ணாவியார்
- கத்தோலிக்கமத செல்வாக்கு
- கரலிய அரங்கு பயன்படுத்தப்படல்
- ஆடல், பாடல் பண்பு காணப்படல்.

**6.**

i) தொலைக்காட்சி நாடகம் :

- சின்னத்திரை
- சின்னத்திரையானமையினால் பாத்திரங்களின் முகங்களை அண்மித்துக் காட்டல்.
- தொடர் அரங்க நாடகங்கள்
- தொழில்நுட்பமுடையது.
- கமராவை முதன்மைப்படுத்தியது.

ii) அரங்கத் தொழில்நுட்பம் :

- அரங்கில் பல்வேறு மூலகங்களுடனும்தொழில்நுட்பம் இணைந்துள்ளது.
  உ-ம் : ஒளி, வேடஉடை, காட்சி விதானிப்பு, லி, இசை, திரைப்பயன்பாடு ஆகியவற்றுடன் பொருத்தமாக விளக்கியிருப்பின் புள்ளி வழங்கப்படும்.

iii) பார்வையாளர் : பார்வையாளர் இல்லாது நாடகம் இல்லை. நாடகம் நடைபெறப் பார்வையாளர் அவசியம். இருவழித் தொடர்பாடல் மூலமே செய்தி பரிமாறப்படுகிறது. இருவழித் தொர்பூடகமான நேரடி உறவுக்கு பார்வையாளர் அவசியம்.

iv) அரங்கவெளி : அரங்கவெளி என்பது வெறுமனே பார்க்குமிடம் மட்டுமன்றி, பார்ப்போரின் நாடகம் பற்றிய விளக்கத்திற்கும் ஆற்றுகையின் முழுமைக்கும் உதவுகின்றது. பிரதேசத்துக்குப் பிரதேசம், பண்பாட்டுக்குப் பண்பாடு ஆற்றுகை வெளி மாறுபடுகின்றது.

உ-ம் : கிரேக்க திறந்தவெளி அரங்கு
வட்டக்களரி, யப்பானிய நோ, கபுக்கி அரங்கு
ஷேக்ஸ்பியர் கால குளோப் அரங்கு, தானாயம் பல

v) தமிழ் சினிமாவின் மொழிப்பிரயோகம்

கவர்ச்சிப்பண்பு, பாடல் காட்சிகளை முதன்மைப்படுத்தல், வன்முறை பயன்படுத்தல், மிகைப்பாட்டுத் தன்மை காணப்படுதல், வேகமாகக் கதை நகரும் போக்கு, பெரும்பாலும் காதல், தீமையை அழித்தல் போன்ற கருப்பொருள், இளைஞர்களைக் கவரும் வகையில் காட்சிகள் அமைக்கப்படுதல், மாணவர்களின் விமர்சனக் கண்ணோட்டத்தைக் கருத்திற்கொண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.